

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (3.7.2025) தலைமைச் செயலகத்தில், நீர்வளத்துறை சார்பில் நபார்டு ஆலோசனை சேவைகள் (NABARD Consultancy Services) மற்றும் வசார் லேப்ஸ் நிறுவனம் (VASSAR Labs) மூலம் வடிவமைக்கப்பட்ட 30 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான தமிழ்நாடு நீர்வள தகவல் மற்றும் மேலாண்மை அமைப்பின் இணையதள சேவையையும், 3 கோடியே 55 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான தமிழ்நாடு செயற்கைக்கோள் அடிப்படையிலான நீர்நிலைகளின் தகவல், கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு அமைப்பின் இணையதள சேவையையும் தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில், நீர்வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், நீர்வளத்துறை செயலாளர் ஜெ. ஜெயகாந்தன், நீர்வளத்துறை முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), ச. ரமேஷ், நீராய்வு நிறுவனம் நீரியல் மற்றும் தரக்கட்டுப்பாட்டு பிரிவின் தலைமைப் பொறியாளர் மற்றும் இயக்குநர் பு. சுந்தரராஜன், நபார்டு தலைமைப் பொது மேலாளர் ர. ஆனந்த், TNWRIMS & TNSWIP திட்ட ஒருங்கிணைப்பாளர் கோ. சுப்புராஜ், வசார் லேப்ஸ் முதன்மை செயல் அலுவலர் நிகிலேஷ் குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



'ஓரணியில் தமிழ்நாடு' கழக உறுப்பினர் சேர்க்கையை, கடலூர் கிழக்கு மாவட்டம்,காட்டுமன்னார்கோயில் வட்டம், முட்டம் கிராமத்தில், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், தன்னை கழக உறுப்பினராக புதுப்பித்து கொண்டு, தொடங்கி வைத்தார்கள், மாவட்ட கழக பொருளாளர் எம்.ஆர்.கே.பி.கதிரவன், தொகுதி பொறுப்பாளர் விஜயன் ராமகிருஷ்ணன்,ஒன்றிய செயலாளர்கள் அ.முத்துசாமி, டி.ஜெயபாண்டியன்,பேரூர் செயலாளர் ஆர்.கணேசமூர்த்தி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜீ. கார்த்திகேயன், பொதுக் குழு உறுப்பினர் கே.பி.ஆர்..பாலமுருகன், தொகுதி பார்வையாளர்கள் டி.வெங்கடாசலபதி, ஏ.பழனிசாமி, முட்டம் கிளை கழக தலைவர் ஆசிரியர் ஏ.இராமமூர்த்தி, கிளை செயலாளர்கள் தாமோதரன்,பழனிசாமி, மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

# மண்-மொழி - மானம் காக்கும் மாமுதல்வர் மாட்சி ஆட்சி மீண்டும் மீண்டும் மலர்கவே



ஓரணியில்தமிழ்நா டின்உரிமை நாட்டுவோம் - தமிழர்
ஒற்றுமையாய்த் திரண்டெழுந்தே வலிமை காட்டுவோம்!
வீரமண் நம்மொழி மானம்வெற்றி பாடுவோம்- ஈடில்
வினைத்திட்ப மாமுதல்வர் வியப்பின்ஆற்றல் கூடுவோம்! (ஓரணி)

மக்கள் பாதுகாப்பியக்க தி.மு.கழகம் - என்றுமே
வாகைசூடும் வழிஅமைக்க உறுப்பினர் சேர்ப்போம்
தக்கதிறமை உறுதிஉழைப் புருவாம்நம் - முதல்வர்
தகைமைசான்ற தடத்தின் புதுமைத் தன்மை சமைப்போம்! (ஓரணி)

வரலாற்றுப் புகழ்செய் வளர்ச்சி மாட்சிகள் காண்போம் - ஒன்றிய
வல்லாட்சிக் கேபாடம் புகட்டும் நல்வழி பூண்போம்!
இரவுபகல் பாராதே இமைகள்தாமும் மூடாதே - உழைக்கும்
இதயம்வாழும் முத்துவேல் கருணாநிதி இஸ்டாலின் இணைவோம் (ஓரணி)


ஆண்டாண்டாய் நமைஅடிமை அநீதி ஆக்குவார் - ஒன்றிய
அரசுசெய்யும் வஞ்சகங்கள் அகற்றிப் போக்குவோம்!
நீண்டநெடும் காலமாய் நாம்நெடிதுபோ ராடுவோம் - இன்னே
நேயமில் மாயதில்லி மமதைதன்னை மாற்றுவோம்! (ஓரணி)

குருதிசிந்திக் கொடுமைஏற்ற மொழிப்போர்க் களத்தின்- உறுதிக்
கொள்கைவெற்றி இருமொழிநம் குறிக்கோள் வெற்றி
கருதா(து)இன்னல் தரும்இந்தி மும்மொழி புகுத்தும்-தீமைப்
பொல்லா விலங்கைப் பொடிபொடி யாகஉடைப்போம்! ஓரணி)

உலகமெலாம் புகழும்கல்வி உயர்ந்த முறைதமிழ்நாடே - இதனை
ஒழிக்கஎண்ணும் ஒன்றியத்தின் கொடுங்கோல் விரட்டுவோம்
நிலம்முதன்மை உச்சகல்வி பயிலும்தமிழ்; மாணவர்கள்- உரிமை
நிலைநாட்டப் பொருள்தராத கயமையை மாற்றுவோம் (ஓரணி)

எத்தனையோ எத்தனையோ ஈனம்செய்யும் ஒனறிய- அரசின்
இழிவை நீக்கும் வழிகள்தேர்நம் முதல்வர்பாதை நடப்போம்!
கொத்தடிமைக் கூட்டம்தமிழ்நாட்டு எதிர்க்கட்சிகள் - செல்லும்
கொள்கையிலாத் தன்மைக்கடந்து வெல்நம் முதல்வர் வாழ்த்துவோம்! (ஓரணி)

மண்மொழி நம்மானம் காக்கும் கழகம் தி.மு.க.வே இணையில்
மாண்புமிகு எண்ஒன்று முதல்வர்நம் இஸ்டாலினோ
கண்களைப் போல்மக்களை காக்கும் காப்புத் தெய்வம் இஸ்டாலினே!
காலம்வென்று மீண்டும் மீண்டும் ஆட்சி காண்பார் வாழ்க வாழ்கவே! (ஓரணி)



பெருங்கவிக்கோ
**வா.மு.சேதுராமன்**
உலகஅமைப்பாளர், பன்னாட்டுத் தமிழுறவு மன்றம்

# மரபணுவிலும் நவீனம்!

## 'கணையாழி' தலையங்கம்!

தமிழின் மரபணுவிலும் நவீனம் சேர்த்த முன்னாள் முதல்வர் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் நூற்றாண்டு விழாக் கருத்தரங்கத்தைத் தமிழகத்தின் மரபணுவில் நவீனம் சேர்த்துக் கொண்டிருக்கும் இந்நாள் முதல்வர் தொடங்கி வைத்திருக்கிறார்.

சாகித்திய அகாதமியின் ஃபெல்லோவாக இருந்து வருகிற கணையாழியின் சிறப்பாசிரியர் இ.பா. அவர்களுக்கு இந்த மாதம் 96 வயது! வாழ்த்து பெறுகிறது கணையாழி!

இந்த ஆண்டு தமிழில் இளம் படைப்பாளர் விருதுகளைப் பெற்றிருக்கிறார்கள் லட்சுமிஹரும் விஷ்ணுபுரம் சரவணனும்! வாழ்த்துகிறது கணையாழி!

பேராசிரியர் அறவேந்தனின் விடாமுயற்சியால் சாகித்திய அகாதமியும் ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகமும் தமிழ்நாடு அரசும் சேர்ந்து கலைஞரைக் கொண்டாடி இருக்கின்றன.

விடுதலைக்கும் முன்பே 1944-இல் கோரிக்கை வைக்கப்பெற்று விடுதலை இந்தியாவில் நாடாளுமன்றத்தில் 1952 இல் அறிவிக்கப்பெற்று, 1954-இல் தொடங்கப்பட்டிருக்கிறது சாகித்திய அகாதமி!

சாகித்திய அகாதமியின் முதல் பொதுக்குழுவில் இடம்பெற்ற வர்களில் அபுல் கலாம் ஆசாத், ராஜாஜி, சர்வபள்ளி ராதாகிருஷ்ணன் குறிப்பிடத்தக்கவர்கள். அப்போது அகாதமியின் தலைவராக இருந்தவர் ஜவகர்லால் நேரு.

நேரு தலைவராக இருந்த சாகித்திய அகாதமியும் நேரு பெயரில் இருக்கும் பல்கலைக்கழகமும் தமிழ்நாடு அரசுடன் சேர்ந்து கலைஞர் நூற்றாண்டு விழாக் கருத்தரங்கத்தை நடத்தியுள்ளன.

தமிழ், செம்மொழியாக அறிவிக்கப்பட வேண்டும் என்பது நூற்றாண்டுக் காலக் கோரிக்கை. ஜூன் 7, 2004 இல் நாடாளுமன்றத்தில் அறிவிப்பு செய்தவர் அப்துல் கலாம்! அறிவிக்கச் செய்தவர் கலைஞர்!

செம்மொழி நிறுவனம் தமிழ்நாட்டில் தொடங்கவும் தன் சொந்த நிதியில் இருந்தே ஒரு கோடி ரூபாயைத் தந்து விருது வழங்கவும் செம்மொழி நிறுவனத்திற்குத் தலைவராகவும் இருந்து குடியரசுத் தலைவர் கையால் தொல்காப்பியம், குறள்பீடம் விருதுகளை வழங்கவும் வித்திட்டவர் கலைஞர்தான்.

அவரது பிறந்த நாளைத்தான் செம்மொழி நாள் என்று அறிவித்திருக்கிறார் தமிழ்நாடு முதல்வர்!

அவரது நூற்றாண்டைத்தான் சாகித்திய அகாதமியும் ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகமும் தமிழ்நாடு அரசுடன் சேர்ந்து கொண்டாடி இருக்கின்றன!

தாகூருக்கு 1961-இல், பாரதியாருக்கு 1983-இல், பாரதிதாசனுக்கு 1990-இல், கலைஞருக்கு 2025இல் நூற்றாண்டு விழாக் கருத்தரங்குகளை நடத்தியி ருக்கிறது சாகித்திய அகாதமி!

பட்டியலில் சாகித்திய அகாதமி விருது பெறாதவர்களான தாகூர், பாரதியார் போலவே கலைஞரும் இடம் பெற்றிருக்கிறார்.

ஆனாலும் இந்த விழாக் கருத்தரங்கு அரசும் அகாதமியும் ஒரு பல்கலைக்கழகமும் சேர்ந்து நடத்தியது! ஓர் எழுத்தாளரின் நூற்றாண்டு விழா நிகழ்ச்சி மேடையில் அவரது குடும்பத்தினர் மட்டுமே கலந்துகொள்ளும் விதியை வைத்திருக்கிறது சாகித்திய அகாதமி! எழுத்தாளரான முன்னாள் முதலமைச்சரின் மகன் இந்நாள் முதல்வராகக் கலைஞர் நூற்றாண்டு விழாக் கருத்தரங்கைத் தொடங்கி வைத்திருக்கிறார்! இப்படி ஓர் அரிய நிகழ்வையும் சாகித்திய அகாதமிக்குத் தந்திருக்கிறார் கலைஞர்!

கலைஞர் கதைகளால் வளர்ந்தவர்!

அகத்தியர் வழிபட்ட இடம்! பாண்டவர்கள் வழிபட்ட கோயில்!

தேவார மூவர் பாடிய ஊர்! சேக்கிழார் கொண்டாடிய ஊர்! புலவர் குண்டையூர்க் கிழாருக்கு மதுரைச் சொக்கநாதர் மீனாட்சியுடன் காட்சி தந்த ஊர்! சோழர், பாண்டியர் காலக் கல்வெட்டுகள் இருக்கும் ஊர் என்று புராணக் கதைகளும், வரலாற்றுக் கதைகளும் தந்தை சொல்லும் இராமாயண, மகாபாரதக் கதைகளுமாக நிரம்பி வழியும் திருக்குவளையில் பிறந்திருக்கிறார் கலைஞர்!

மனித குல வரலாறு கதைகளால் கட்டமைக்கப்பட்டிருக்கின்றது. கதை கேட்கும் விருப்பத்திற்குக் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை விதிவிலக்கு இல்லை!

கதை கேட்கும் விருப்பம் கடவுளுக்கும் உண்டு என்பதைக் கதைகளே சொல்கின்றன! கதைகள் இல்லாத கடவுள் உண்டா? கதைகள்தாம் மன உலகில் நம்பிக்கையை உருவாக்கு கின்றன!

பழைய நம்பிக்கையைக் காப்பாற்றப் பழைய கதைகள்!

ஆனால், கலைஞர் பழைய கதைகள் உருவாக்கியுள்ள நம்பிக்கை மன உலகில் வாழ மறுத்தவர்! மன உலக நம்பிக்கையை மாற்றிடப் புதிய மன உலகை உருவாக்கப் பழைய கதைகளில் நவீனத்தைச் சேர்த்தவர்!

நளாயினி போன்ற புராணக் கதைகளையும் நவீனக் கண்ணோட்டத்தில் பார்க்கச் சொன்னவர்!

நாடகத்தில் சாக்ரடீஸ் உயிரைக் காப்பாற்றிக் கொடுத்தவர்!

தொல்காப்பியப் பூங்கா, குறளோவியம், சங்கத்தமிழ், சிலப்பதிகாரம் என்று தமிழின் மரபணுவிலும் நவீனம்! கொண்டாடி இருக்கிறது சாகித்திய அகாதமி!



அன்புடன்
**ம.ரா.**

- நன்றி
**கணையாழி - ஜூலை 2025**

## கீழடி அகழாய்வுகளின் கண்டுபிடிப்புகள், தமிழர் நாகரிகத்தின் தொன்மையை, வட இந்தியாவிலும் பரவச் செய்துள்ளன!

# வேத நாகரிகத்தை விட கீழடி நாகரிகம் தொன்மையானது!

## சமூக வலைதளத்தில் - மனிஷ் சிங் வெளியிட்டுள்ள பதிவு!

**சென்னை, ஜூலை. 4-**

**கீழடி அகழாய்வுகளின் கண்டுபிடிப்புகள், தமிழர் நாகரிகத்தின் தொன்மையை வட இந்தியாவிலும் பரவச் செய்துள்ளன. இது குறித்து மனிஷ்சிங் என்பவர் வெளியிட்டுள்ள குறிப்பில், வேத நாகரிகத்தை விட கீழடி வெளிப்படுத்தி உள்ள நாகரிகம் தொன்மையானது எனத் தெரிவித்துள்ளார்.**

”அகழாய்வுகளின் அரசியல், இந்திய மண்ணுக்குள் புதைக்கப்பட்ட உண்மைகள் எனும் தலைப்பில் மனிஷ் சிங் தனது சமூகவலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், ஒரு காலத்தில், இந்தியாவின் வரலாறு வேதங்களுடன் தொடங்கியதாகவும், நமது நாகரிகம் கங்கையின் மடியில் செழித்து வளர்ந்ததாகவும் நம்பப்பட்டது என்றும் ஆரியர்களும் பிராமணர்களும் இக்கருத்தை பரப்பி வந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

பின்னர். சர் ஜான் மார்ஷல் தலைமையில் நடைபெற்ற அகழாய்வுகளின் முடிவில் வெளியான சிந்து சமவெளி நாகரிகம், வேத நாகரிகம் குறித்த பொய்யான கோட்பாடுகளை தகர்த்துவிட்டதாகவும், வேத யுகத்திற்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, இந்திய மண்ணில் முழுமையாக வளர்ந்த நகர்ப்புற நாகரிகம் இருந்ததும், அங்கு வாழ்ந்த மக்கள் ஆரியர்கள் அல்ல என்பதும் உறுதி செய்யப்பட்டதால், ஆரியர்கள் வெளியில் இருந்து வந்தவர்கள் என்பதை ஒப்புக் கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா பிளவுபட்டபோது, நமது நாகரிகத்தின் உண்மையான பிறப்பிடம் பாகிஸ்தானுக்குச் சென்று விட்டது என்றும், இது கலாச்சார தேசியவாதத்திற்கு ஏற்பட்ட பேரிடி என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

70 ஆண்டுகளுக்குப் பிறகு, மீண்டும் எழ முயற்சிக்கும் கலாச்சார தேசியவாதம், வட இந்தியாவே இந்திய நாகரிகத்தின் தொட்டில் என பிரச்சாரம் செய்யும் நேரத்தில், மதுரை அருகே, 2016 ஆம் ஆண்டு கீழடி எனும் இடத்தில் நடைபெற்ற அகழாய்வுகளில், தங்கம் மற்றும் வெள்ளி நாணயங்கள், மணிகள், வர்ணம் பூசப்பட்ட மட்பாண்டங்கள், குழாய்கள், வடிகால் அமைப்புகள் மற்றும் நீர் சுத்திகரிப்பு அமைப்புகள் உள்ளிட்ட கட்டமைப்புகளின் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டதையும், இரும்பு மற்றும் வெண்கலத்திற்கான உருக்கு ஆலைகள் இருந்ததற்கான தடயங்களும் கிடைத்ததையும் சுட்டிக் காட்டி உள்ள கட்டுரையாளர்,

இது ஒரு தொழில் பெருநகரமாக இருந்திருக்கலாம் என்றும் அங்கிருந்த எழுத்து வடிவங்கள் சிந்து சமவெளி எழுத்தை ஒத்திருந்ததாகவும், வட இந்தியாவைவிட தென்னிந்தியாவில் பழமையான ஒரு நாகரிகம் இருந்தது உறுதி என்றும் தெரிவித்துள்ளார்.

இந்திய வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயம் தொடங்கியதைக் கொண்டாடுவதற்கு பதிலாக ஆய்வுக்கான நிதியை ஒன்றிய அரசு குறைத்ததுடன், அகழாய்வுகளின் தலைமை அதிகாரியை மாற்றிவிட்டு, ஆய்வறிக்கையை திரும்பப் பெறுமாறு அவருக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டதாகவும், பின்னர் வந்த அதிகாரி முக்கியத்துவம் வாய்ந்த எதுவும் கிடைக்கவில்லை என்று கூறி ஒரு அறிக்கையை விரைவாகத் தாக்கல் செய்ததாகவும், அதனைத் தொடர்ந்து அகழாய்வு நிறுத்தப்பட்டதாகவும் கட்டுரையாளர் தெரிவித்துள்ளார்.

பின்னர், நீதிமன்றத்தின் தலையீட்டைத் தொடர்ந்து அகழாய்வுப் பணிகளை தமிழ்நாடு அரசே தொடர்ந்ததாகவும், இதன் விளைவாக

இலக்கியங்கள் மூலம் மட்டுமே அறியப்பட்ட சங்க காலம், தற்போது தொல்பொருள் சான்றுகளுடன் உறுதியாகி விட்டதாகவும், வட இந்தியாவுடன் தொடர்பில்லாத ஒரு பண்டைய திராவிடக் கலாச்சாரம் நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கீழடி அகழாய்வுகளில் ஒன்றிய அரசின் தலையீடு, ஆரிய நாகரிகம் உயர்ந்தது என்ற கட்டுக்கதையைப் பாதுகாப்பதையும், தென்னிந்தியாவை குறைமதிப்பீடு செய்வதையும் நோக்கமாகக் கொண்டதாகவே உள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது, உத்தரப்பிரதேசத்தில் சரஸ்வதி நாகரிகம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக கூறுவது கீழடி அகழாய்வுகளை சிறுமைப்படுத்தும் நோக்கம் கொண்டவை என்றும், ஒன்றிய அரசின் பல நிறுவனங்களைப் போலவே, இந்திய தொல்பொருள் ஆய்வு நிறுவனமும் அரசியல் மயமாகி விட்டதாகவும் மனிஷ் சிங், தனது கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

## கழக துணை பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி. ஆலோசனை வழங்குகிறார்!

# வேளச்சேரி - சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதி பாக நிலை முகவர்கள் (BLA-2) கூட்டம்!

## மாவட்டக் கழக செயலாளர் – அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு!



சென்னை தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட இரண்டு சட்டமன்றத் தொகுதிகளில் உள்ள பாக நிலை முகவர்கள் (BLA2) கலந்து கொள்ளும் ஆலோசனைக் கூட்டம் கீழ்க்கண்ட நிகழ்ச்சி நிரல்படி தொகுதி வாரியாக நடைபெற உள்ளது.

**வேளச்சேரி சட்டமன்றத் தொகுதி – நாள்: 5–7–2025 காலை 11.00 மணி, இடம் : கபாலி திருமண மண்டபம் காந்தி சாலை, வேளச்சேரியிலும்,**

**சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதி – நாள்: 5–7–2025 மாலை 5–00 மணி, இடம்: எஸ்.பி.எஸ். திருமண மண்டபம் ராஜ் தியேட்டர் அருகில், சைதாப்பேட்டையிலும் நடைபெறுகிறது.**

மேற்கண்ட கூட்டத்தில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. கலந்து கொண்டு தேர்தல் பணி சம்பந்தமாக ஆலோசனை வழங்க உள்ளார். கூட்டத்துக்கான ஏற்பாடுகளை இரண்டு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதி செயலாளர்கள் நிகழ்ச்சிநிரல்படி பாக நிலை முகவர்களை குறிப்பிட்ட நேரத்தில் பங்கேற்க செய்தும், இரண்டு தொகுதிகளுக்குட்பட்ட நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், கழக அணிகளின் மாநில நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தொகுதிப் பார்வையாளர்கள், தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்கள், அனைத்து அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள் ஆகியோர் தவறாமல் பங்கேற்று சிறப்பிக்க வேண்டுகிறேன்.

**அமைச்சர் மா.சுப்பிரமணியன்,**
செயலாளர், சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**எம். கிருஷ்ணன்**
**ஜூலை 4 (2022)**



இளமைப் பருவத்திலேயே கழகத்தில் தன்னை இணைத்துக்கொண்டு பணியாற்றியவர்.

மாதவரத்தில் நாற்பது ஆண்டுகள் வட்டச் செயலாளராகவும், மாவட்ட பிரதிநிதியாகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

இந்தி எதிர்ப்பு போராட்டம் போன்ற பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**